# இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 ஜனவரி மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 31.01.2019 ந் தேதி காலை 10.45 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் ஜனவரி 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.808**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் ஜனவரி 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.809**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 3**

கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு, இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய 2018–2019ம் ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.50,000/– உடன் செலுத்துமாறு, மேற்படி நிறுவனத்திலிருந்து ந.க.எண்.848/2018/அ3, நாள்.18.12.2018ந் தேதி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி, கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டுச்சந்தா(Annual Contribution) தொகை ரூ.50,000/–த்தை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.3285/2017/பி1)

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.810**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி–2018–19, நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறைகளில் (Wall Panelling) அமைக்கும் பணிக்கு 08.01.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 3.40,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 3.40,000/– | 1.30% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 5016/2018/இ1

**தீர்மானம் எண்.811**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் 5**

இராமநாதபுரம் நகராட்சி, கல்வி நிதி–2018–19, நகர் பகுதியில் அமையப்பட்டுள்ள அங்கன் வாடியில் கழிப்பிட வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கும் பணிக்கு 08.01.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 1,30,000/– | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.சரவணன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம். | 1,30,000/– | 2.00% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி, இராமநாதபுரம் அவர்களது 0.15% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 5013/2018/இ1

**தீர்மானம் எண்.812–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 6**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம்–2018–19, Pumping Main குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சீரமைக்கும் பணிக்கு 08.01.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 5,00,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 5,00,000/– | 1.30% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 4928/2018/இ1

**தீர்மானம் எண்.813–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 7**

இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரம் 20.10.2017–ல் A.R.மருத்துவமனையில் பிறந்த ரூத்விகா என்ற குழந்தையின் பிறப்புச் சான்றிதழில் தந்தையின் பெயர் திருத்தம் செய்வது தொடர்பாக நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக வழக்கு எண்.W.P(MD)No.13159/2018ன்படி வழக்கினை எடுத்து நடத்துவதற்கு ஆகும் செலவினம் மற்றும்

வக்காலத்து கட்டணம் ரூ.15,000/—ம் அரசு வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1971/2018/எச்1

**<u>தீர்மானம் எண்.814</u>**— அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 8</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வெற்றிலைக்காரத் தெருவில் ரோடு மற்றும் பூங்கா இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.திருமதி.ஹவ்வாபீவி என்பவரால் நகராட்சி மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து (வழக்கு எண் MP(MD)No.2/2006 மற்றும் SANo.953/2006) இடைக்கால தடை 17.10.2006 தேதியன்று பெற்றுள்ளார்.12 வருடங்களாக வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நகராட்சி சார்பாக உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களால் இவ்வழக்கின் இடைக்கால தடையினை ரத்து செய்து நகராட்சிக்கு சாதகமாக வழக்கினை நடத்தி முடிக்க கோரப்பட்டது.

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் 09.07.2018ந் தேதிய கடிதத்தில் நகராட்சி சார்பாக வக்காலத்து தாக்கல் செய்தும் எதிர்மனு தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளதாகவும் வழக்கு கட்டணம் ரூ.15,000/—(பதினைந்தாயிரம்) வழங்க கோரியுள்ளார். மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – வழக்கு எண் SA(MD)No.953/2006க்கு உள்ள MP(MD)No.2/2006ஐ ரத்து செய்ய கோருவதற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/— வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.F1/839/97

**<u>தீர்மானம் எண்.815</u>**— அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்—4, பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் வடக்கு ரத வீதி, டவுண் சர்வே எண்—67, பொது பாதை வழியாக கழிவுநீர் குழாய் பதித்தது தொடர்பாக திரு.என்.நந்தகோபால் செட்டியார், இராமநாதபுரம் என்பவர் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு எண்.ஓ.எஸ்.நம்பர்.125/2016, I.A.No/532—2016ன்படி தொடரப்பட்ட வழக்கிற்கு உத்தேச வழக்கு கட்டணத்தை திரு.என்.சரவணபாபு, Standing Council, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** –மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4356/2018/E1

**<u>தீர்மானம் எண்.816</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்–28, முனியசாமி கோவில் தெரு தெரு, இராமநாதபுரம் என்ற முகவரியில் பொது பாதை வழியே பாதாள சாக்கடை குழாய் பதித்து இணைப்பு வழங்க கோரி திரு.எம்.கதிரேசன் த/பெ. மகாலிங்கம் என்பவர் நகராட்சி மீது சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.25472 of 2018–ன் படி வழக்கை நகராட்சிக்கு சாதகமாக முடித்து கொடுக்க திரு.ஏ.கண்ணன் அரசு வழக்கறிஞர், அவர்களுக்கு ஆகும் உத்தேச வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** –மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.299/2019/E1

**<u>தீர்மானம் எண்.817</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 11</u>**

211 இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி மாவட்ட ஆட்சியர் 17.12.2018–ம் தேதிய ஆலோசனை கூட்டம் மற்றும் இராமநாதபுரம் வட்ட ஆட்சியர் அவர்களின் 10.12.2018, 14.12.2018 மற்றும் 21.12.2018ந் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தலின்படி வருகின்ற பாராளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் இவையினை எதிர்நோக்கி தற்போது தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேற்படி தேர்தல் பணி கணிணியில் அவ்வப்போது வரப்பெறும் மின்னஞ்சல் செய்திகளுக்கு உடனுக்குடன் அறிக்கை மற்றும் படிவங்கள் தயார் செய்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கு கணிணி அமைப்பாளர் (Computer Programer) வைத்து மேற்படி பணிகள் மேற்கொள்ள இருப்பதால், தேர்தல் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 89 நாட்களுக்கு (ரூ.34,620/–)ஐ மட்டும் வழங்கவும், ஒருவரை நியமித்து மாவட்ட ஆட்சியரின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள விலை விகிதத்தின்படி ஊதியம் வழங்கவும், தேர்தல் பணிகளுக்கு நியமனம் செய்யப்பட்டவருக்கு உத்தேச தொகை ரூ.34,620/–ஐ பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** –மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3915/2018/F2(தேர்தல்)

**<u>தீர்மானம் எண்.818</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 12</u>**

211 இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை செம்மை படுத்துதல், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் தொடர்பாக 18.01.2019ம் தேதிய ஆய்வு கூட்டத்தின் அறிவுறுத்தலின்படி வருகின்ற பாராளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் இவையினை எதிர்நோக்கி தற்போது தேர்தல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. நகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களை கணிணி மூலம் பதிவேற்றம் செய்தும், படிவங்களை கணிணியில் ஸ்கேன் செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் பிரிவுக்கு CD மூலம் அனுப்பி வைக்கவும், படிவம் 6 மற்றும் படிவம் 7(5000 பிரதிகள்) அச்சிடுவதற்கும் BLO, BLA ஆலோசனைக்கூட்டம் நடத்துதல் மற்றும் (NVD) வாக்காளர் தினம் கொண்டாடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுவதற்கும் ஏற்படும் சில்லரை செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/– பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3915/2018/எப்2(தேர்தல்)

**<u>தீர்மானம் எண்.819</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 13</u>**

இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை அவர்களது கடிதம் எண்.38984/2014/பி1, நாள்.11.01.2019–ல் தூய்மை இந்தியா இயக்கம் (SBM)– 8th State High Powered Committee (SHPC)–யால் இந்நகராட்சிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு அனுமதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (லட்சத்தில்) ரூ. |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் நகராட்சி, முதல் நிலை குப்பைகள் சேகரம் செய்யும் பணிக்கு 25–எண்ணம் பேட்டரியால் இயங்கும் வாகனம் வாங்குதல் (Battery Operator Vehicle) BOV | 45.00 |
| 2 | இராமநாதபுரம் நகராட்சி, முதல் நிலை குப்பைகள் சேகரம் செய்யும் பணிக்கு 3–எண்ணம் சிறிய இலகுரக வணிக பயன்பாட்டிற்கான வாகனம் (Light Commercial Vehicle) LCV | 16.80 |

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 28 வாகனம் வாங்குவதற்கு திட்ட மதிப்பீடு ரூ.61.80/– லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| GOI Share | State Share | ULB Share | Total Estimate Amount |
|---|---|---|---|
| 35% | 55% | 10% | 100% |

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்

ந.க.எண்.138/2019/E1

**<u>தீர்மானம் எண்.820</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சி, தூய்மை இந்தியா இயக்க திட்டம் 2018–2019–ன் கீழ் முதல் நிலை திடக்கழிவு சேகரப் பணிக்காக சிறிய இலகுரக வாகனம் (LCV) 4–எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக உள்ள விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | விளம்பரதாரர்களின் பெயர்கள் | Bill No & Date | பட்டியல் தொகை |
|---|---|---|---|
| 1 | மாலை முரசு – நாளிதழ், மதுரை | ADB2263, நாள்.21.12.2018 | 6,563/– |

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3877/2018/இ1

**<u>தீர்மானம் எண்.821</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 15</u>**

இராமநாதபுரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணியாற்ற ஓய்வு பெற்ற திருமதி.வள்ளி என்பவர் தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தொடர்ந்த திருமதி.வள்ளி மரணம் அடைந்துள்ளதை தொடர்ந்து அன்னார் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பாக வழக்கை எடுத்து நடத்தி வரும் அரசு வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழக்கு மற்றும் வக்காலத்து கட்டணம் ரூ.10,000/–ம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3804/2014/எச்1

**<u>தீர்மானம் எண்.822</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 16</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் விநியோக வீட்டு இணைப்புகள், அனைவருக்கும் வழங்கவும், அதனை தவணை முறையில் முன் வைப்புத் தொகையினை பெற்றுக் கொண்டு அனைவருக்கும் வழங்க அரசாணை நிலை எண்.126 நாள்.28.11.2018—ன்படி ஆணையிடப்பட்டுள்ளது. அதனை பொது மக்களுக்கு தெரியப்படுத்தவும், பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பாகவும், வெளியிட அறிவுறுத்திடப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து வார்டுகளுக்கும் ஒரு விளம்பர பலகை வைக்க வேண்டியுள்ளது. அதன்படி மொத்தம் 33 வார்டுகளுக்கும் *6X5* அளவில் விளம்பர பலகை வைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.     /2019/இ1

**<u>தீர்மானம் எண்.823</u>**— அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 17</u>**

இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்—6, பாத்திமா நகரில் துாய்மை இந்தியா திட்டம் 2018—2019ன் கீழ் நுண்ணுரம் செயலாக்கம் மையம் (Micro Compost Center) MCC கட்டும் பணியினை தடுத்து நிறுத்துவதற்கு திரு.மோகன், இராமநாதபுரம் என்பவரால் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No.703/2019—ன்படி வழக்கினை நடத்துவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/—ஐ திரு.ஏ.கண்ணன் அரசு வழக்கறிஞர், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.824</u>**— அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 18</u>**

அரசாணை எண்.84, சுற்றுச் சூழல் மற்றும் வனம் (சு.ச.2) துறை நாள்.25.06.2018ன் படி தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தி துாக்கி எரியும் பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாட்டை 01.01.2019 முதல் தடை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் பேரில் இராமநாதபுரம் நகரில் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடை செய்தும், அதற்கு மாற்றாக மாற்றுப் பொருட்களை பயன்படுத்தவும், அதற்கான விழிப்புணர்வு பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடம் ஏற்படும் வகையில் இராமநாதபுரம் நகரில் 4 இடங்களில் மாற்றுப் பொருட்கள் கண்காட்சி ஸ்டால்கள் அமைக்க மாவட்ட ஆட்சியர், அவர்கள் அறிவுரைகள் வழங்கி, கடிதத்தின் மூலம் (கடிதம் ந.க.எண்.3/32976/2018 நாள்.03.01.2019) தெரிவித்துள்ளார்கள். எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவின் பேரில் நகரில் 4 கண்காட்சி ஸ்டால்கள் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும், உத்தேச

செலவினம் ரூ.1,30,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.இப்பணியான உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் மேற்காணும் பணியினை செய்து முடிக்கவும், அதற்கான செலவினத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி செய்து முடிக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.825**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 19**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் கழிவு நீர் அகற்றும் காம்பக்டர் லாரி TN65-AD–1899 – வாகனத்திற்கு 22.01.2019 அன்றுடன் இன்சூரன்ஸ் முடிவடைவதால் 2018–19ம் ஆண்டிற்கு மீண்டும் புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.38,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3880/2016/எச்1

**தீர்மானம் எண்.826**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 20**

இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் நிதி 2018–19, வார்டு எண்–8, காட்டு பிள்ளையார் கோவில் தெரு 3–வது குறுக்கு சந்து கிழக்கியிலிருந்து குடிநீர் விநியோகம் சென்றைடையவில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டடதின் பேரில்,மேற்கண்ட பகுதிக்கு லேத்தம்ஸ் பங்காள ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதிக்கு தண்ணீர் போதிய அளவு கிடைக்காத காரணத்தினால் தற்போது லெட்சுபுரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு பகிர்மான குழாய் பதிப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/–திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1)மன்றம் அனுமதிக்கலாம்

2)குடிநீர் விநியோகம் என்பதினால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 69/2019/இ1

**தீர்மானம் எண்.827**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 21**

இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் நிதி 2018–19, புதிய பேருந்து நிலையம், வாகனம் நிறுத்துமிடத்தில் அமைந்துள்ள திறந்த வெளி கிணறு துார்வாரி சுத்தம் செய்து கொள்ள மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களால் உத்திரவு பிறப்பித்துள்ளார். அதன் அடிப்படையில்

புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள திறந்த வெளி கிணற்றினை தூர்வாரி மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு பணிகள் ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.70/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)**மன்றம் அனுமதிக்கலாம்

**2)**இப்பணி அவசர பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.62/2019/இ1

**<u>தீர்மானம் எண்.828</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 22</u>**

இராமநாதபுரம் நகராட்சி குடிநீர் நிதி 2018–19, குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்திற்கு சுற்றுசுவர் மற்றும் மராமரத்துப் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.63/2019/இ1

**<u>தீர்மானம் எண்.829</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 23</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து பொங்கல் மலர் 2016–ல் விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக உள்ள விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | விளம்பரதாரர்களின் பெயர்கள் | பில் நம்பர் மற்றும் நாள் | பட்டியல் தொகை |
|---|---|---|---|
| 1 | மாலைமலர் நாளிதழ், மதுரை | MDU/D19010163, நாள்.14.01.2019 | 26,250/– |
| 2 | தினதந்தி நாளிதழ்,மதுரை | MDU/18-19/0026548, Date.16.10.20 | 25,338/– |

**<u>அலுவலக குறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.63/2019/இ1

**<u>தீர்மானம் எண்.830</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் 24</u>**

இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை–600 005 அவர்களது ந.க.எண்.257/2018/P1–2, நாள்.06.12.2018–ந்தேதி கடிதத்தின்படி பின்தங்கிய மாவட்ட வளர்ச்சிக்கு, இந்திய அரசு (HUDCO) பெறு நிறுவன சமூக பொறுப்பு நிதி

(Corporate Social Responsibility Grant-CSR) உதவியுடன் திட்டங்கள் செயல்படுத்துவதற்கு இராமநாதபுரம் நகராட்சியில் இருந்து பிரேரணை கோரப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட பணியினை எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் நகராட்சி எம்.எஸ்.கே.தொடக்கப்பள்ளியில் சுகாதார வளாகம் (Toilet Staff Room ) கட்டுதல் | ரூ.10.00 லட்சம் |

மேற்கண்ட பணியினை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நிறுவனத்திற்கு (HUDCO) பெரு நிறுவன சமூக பொருப்பு நிதி (CSR – Grant)–ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5255/2018/இ1

**தீர்மானம் எண்.831**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் 25**

இராமநாதபுரம் நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டம் 2018–19, பம்பிங் ஸ்டேஷன் IV-ல் உள்ள Suction Well–ல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த Platform மற்றும் Chain Pullery Block Supplying Beam பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளதால் அதனை பழுது நீக்கம் மற்றும் புதிய அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.75/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.832**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் 26**

இராமநாதபுரம் நகராட்சி, தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் முதல் நிலை திடக்கழிவு சேகரப்பணிக்காக சிறிய இலகுரக வாகனம் Light Commercial Vehicle (LCV) 4 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.22.40/–லட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் எண்.22866/பி3/2018, நாள்.23.08.2018–ன்படி 7th SHPC கூட்டமர்வில் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தெரிவித்ததின்பேரில் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி (Short Tenders) கோருவதற்கு உரிய அனுமதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் எண்.756/2018/பி2, நாள்.10.09.2018–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இரு உரைமுறையில் (Two Cover System) 04.01.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள்

வரப்பெற்றன. மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளியில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தக்குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே, தொழில் நுட்ப நிபந்தனைகளை Technical Creteria) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய Price Bid-யினை 07.01.2019 அன்று திறக்க தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறாக விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s.ABT Industries Limited, Automobile Division-Head Office, No:51-A, Palakad Main Road, South Ukkadam, Coimbatore. Pin: 641 001 | 22,40,000 | 22,39,800 | 0.01% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.S.Sathoshkumar, No:31, Bharathi Street, Veerakeracam, Coimbatore. Pin: 641 007 | 22,40,000 | 24,00,000 | 7.14% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ABT Industries Limited,Automobile Division-Head Office,No:51-A, Palakad Main Road,South Ukkadam,Coimbatore, அவர்களது 0.01% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தத்தினை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

2)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.1223/2018/இ1.

**தீர்மானம் எண்.833**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது

தனிஅலுவலர்மற்றும்
ஆணையாளர்(பொ)
இராமநாதபுரம் நகராட்சி